
மோசேயின் பாடல்கள்
யாத்திராகமம் 15:1-18



## தேவனை உயர்த்துதல் (வ. 1-3)

அப்பொழுது மோசேயின் புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் யேகோவாவுக்கு பாடின பாட்டு:

கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்;
குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார்..

கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்;

அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்;
அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்;

கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

# பார்வோனின் மீது கர்த்தரின் வெற்றி (வ. 4-5)



பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார்;

அவனுடைய பிரதான அதிபதிகள் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள்.

ஆழி அவர்களை மூடிக்கொண்டது;

கல்லைப்போல ஆழங்களில் அமிழ்ந்துபோனார்கள்.

# கர்த்தருடைய மகத்துவம் நிறைந்த மகிமை (வ. 6-7)

கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம்
சிறந்திருக்கிறது;
கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை
நொறுக்கிவிட்டது.
உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது
முக்கியத்தின் மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்;
உம்முடைய கோபாக்கினியை அனுப்பினீர், அது
அவர்களைத் தாளடியைப்போலப் பட்சித்தது.





# தேவனுடைய சிருஷ்டிப்பு, வல்லமை மற்றும் நியாயத்தீர்ப்பு (வ. 8-10)

உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது;
வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது;
ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்துபோயிற்று.





தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திர்ப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும் என்று பகைஞன் சொன்னான்.



உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக்கொண்டது; திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்துபோனார்கள்.


# தேவனுடைய தனித்தன்மை (வ. 11)

கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?

பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும்,

அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?





# கர்த்தருடைய அன்பும் தெய்வீக எதிரிகளிடமிருந்து விடுதலையும் (வ. 12-16மு)

நீர் உமது வலதுகரத்தை நீட்டினீர்; பூமி அவர்களை விழுங்கிப்போட்டது.

நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர்.

ஜனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிப்பார்கள்; பெலிஸ்தியாவின் குடிகளைத் திகில் பிடிக்கும்.

ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடிக்கும்; கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள்.

பயமும் திகிலும் அவர்கள்மேல் விழும். கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்.



## கர்த்தர் இராஜா,வாக்குப்பண்ணப்பண்ணப்ட்ட தேசத்தில் தம்முடைய ஜனங்களுக்கென்று தருகிறார் (யாத். 16மு-18)



கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்.

நீர் அவர்களைக் கொண்டுபோய், கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்கு நியமித்த ஸ்தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரங்கள் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் அவர்களை நாட்டுவீர்.

கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரிகம் பண்ணுவார்.

யாத்திரகமம் 15:1-18





வெளி 20:7-10; 15:1-4



